செ.வெ.எண்: 43 நாள்: 15.08.2016

## புதுக்கோட்டை மாவட்டத்தில் சுதந்திர தினவிழா சிறப்பு வழிபாடு மற்றும் பொது விருந்து 25 திருக்கோயில்களில் நடைபெற்றது - மாவட்ட ஆட்சித்தலைவர் திரு.சு.கணேஷ்,இ.ஆ.ப, அவர்கள் தகவல்

---

புதுக்கோட்டை மாவட்டம், திருவப்பூர் அருள்மிகு ஸ்ரீமுத்துமாரியம்மன் திருக்கோயிலில் இந்து சமய அறநிலையத்துறையின் சார்பில் சுதந்திர தின விழா சிறப்பு வழிபாடு மற்றும் பொது விருந்தினை மாவட்ட ஆட்சித்தலைவர் திரு.சு.கணேஷ், இ.ஆ.ப, அவர்கள் துவக்கி வைத்து கூறியதாவது:-

நாடு முழுவதும் இன்று 70வது சுதந்திர தினவிழா கொண்டாடப்படுவதையொட்டி இந்து சமய அறநிலையத்துறையின் சார்பில் தமிழகத்தில் உள்ள அனைத்து திருக்கோயில்களிலும் சிறப்பு வழிபாடு மற்றும் பொது விருந்து நடத்த தமிழக அரசு உத்தரவிட்டுள்ளது. அதனடிப்படையில் நமது மாவட்டத்தில் இன்று(15.08.2016) திருவப்பூர் அருள்மிகு ஸ்ரீமுத்துமாரியம்மன் திருக்கோயிலில் சிறப்பு வழிபாடு மற்றும் பொதுவிருந்து துவக்கி வைக்கப்பட்டுள்ளது.



புதுக்கோட்டை சேமப்படை மைதானத்தில் நடைபெற்ற 70வது சுதந்திர தினவிழாவில் பயனாளிகளுக்கு பல்வேறு நலத்திட்ட உதவிகளை மாவட்ட ஆட்சித்தலைவர் திரு.சு.கணேஷ்,இ.ஆ.ப., அவர்கள் வழங்கினார்.

இதே போன்று ஆவுடையார்கோவில் நகர் மற்றும் வட்டம், திருப்பெருந்துறை, அருள்மிகு ஆத்மநாதசுவாமி திருக்கோயில், திருப்புனவாசல் அருள்மிகு விருத்தபுரீஸ்வரர் திருக்கோயில், சித்தக்கூர் அருள்மிகு சேவுகப்பெருமாள் அய்யனார் திருக்கோயில், பொன்னமராவதி வட்டம், கொன்னையூர் அருள்மிகு முத்துமாரியம்மன் திருக்கோயில், திருமயம் வட்டம், இளஞ்சாவூர் அருள்மிகு முத்துமாரியம்மன் திருக்கோயில், திருநல்லூர், அருள்மிகு முத்துமாரியம்மன் திருக்கோயில், இருந்திராப்பட்டி அருள்மிகு முத்துமாரியம்மன் திருக்கோயில், பெரம்பூர், அருள்மிகு வீரமாகாளியம்மன் திருக்கோயில், கீரனூர், அருள்மிகு பகவதியம்மன் திருக்கோயில், கீரனூர், அருள்மிகு தேரடிக்கருப்பர் திருக்கோயில், அறந்தாங்கி நகர் மற்றும் வட்டம் அருள்மிகு வீரமாகாளியம்மன் திருக்கோயில், செய்யானம், அருள்மிகு விஸ்வநாதசுவாமி திருக்கோயில், நற்பவளக்குடி அருள்மிகு மெய்யர் அய்யனார் திருக்கோயில், கீழ்காத்தி, அருள்மிகு காதமறவர் காளியம்மன் திருக்கோயில், சிலட்டூர் அருள்மிகு முத்துமாரியம்மன் திருக்கோயில், விளானூர், அருள்மிகு பாம்பணி அம்மன் திருக்கோயில், மணமேல்குடி அருள்மிகு அருணாச்சலேஸ்வரர் திருக்கோயில், மணமேல்குடி வட்டம், சிங்கவனம் அருள்மிகு விஜயபட்டாபிராமசாமி திருக்கோயில், நச்சாந்துபட்டி அருள்மிகு சிதம்பரரேஸ்வரர் திருக்கோயில், பனையப்பட்டி அருள்மிகு மீனாட்சி சொக்கலிங்கேஸ்வரர் திருக்கோயில், குழிபிறை அருள்மிகு ஸ்ரீமீனாட்சி சுந்தரேஸ்வரர் திருக்கோயில், ஆலங்குடி நகர் மற்றும் வட்டம் அருள்மிகு துவாதசி கட்டளை, அருள்மிகு நாடியம்மன் திருக்கோயில், மணமேல்குடி அருள்மிகு ஜெகதீஸ்வரர் திருக்கோயில் என மொத்தம் 25 கோவில்களில் இந்த சிறப்பு வழிபாடு மற்றும் பொதுவிருந்து நிகழ்ச்சி சிறப்பாக நடைபெற்றது. இப்பொது விருந்தில் அனைத்து தரப்பு மக்களும் சமய, இன மொழி வேறுபாடின்றியும், சமூக பொருளாதார அரசியல் பாகுபாடின்றியும் பெருமளவில் கலந்து கொண்டு சிறப்பு வழிபாடு மற்றும் பொது விருந்தினை சிறப்பித்தார்கள் என்றும் மாவட்ட ஆட்சித்தலைவர் திரு.சு.கணேஷ்,இ.ஆ.ப., அவர்கள் கூறினார்.

இந்நிகழ்ச்சியில் இந்து சமய அறநிலையத்துறை உதவி ஆணையர் திரு.ம.ரமேஷ், மாவட்ட ஊராட்சிக்குழுத்தலைவர் திரு.வி.சி.ராமையா, செயல் அலுவலர்(புதுக்கோட்டை திருக்கோயில்கள்) திரு.ரா.பாண்டியராஜ், வட்டாட்சியர் திருமதி.ஜெயபாரதி, நகர்மன்ற

உறுப்பினர் திரு.பாஸ்கர், முன்னாள் கோயில் தக்கார் திரு.எஸ்.வி.எஸ்.வெங்கடாச்சலம், உள்ளாட்சி அமைப்பின் பிரதிநிதிகள் மற்றும் அரசு அலுவலர்கள் பலர் கலந்துகொண்டனர்.

**செய்தி வெளியீடு: செய்தி மக்கள் தொடர்பு அலுவலர், புதுக்கோட்டை.**